(இ) 15—7—1990 ஆம் நாளன்று இரவு விருதுநகர் முத்து ராமன்பட்டி அருகில் ஒருவர் கொலை செய்யப் பெற்றதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

*திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான நிகழ்ச்சி குறித்து தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த 15—7—1990 ஆம் தேதி இரவு சுமார் 10-45 மணியளவில் விருதுநகர் நகரத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினுடைய விருதுநகர் நகரத்தினுடைய முக்கியமான தலைவர்களிலே ஒருவரான 28 வயது நிரம்பிய இளம் தோழர் சந்துரு என்பவர், அந்த விருதுநகர் நகரத்திலே பிரபல ரௌடியாகவும், சமூகவிரோத செயல்களிலே தொடர்ந்து ஈடுபட்டு, கள்ளச் சாராயம், வழிப்பறிக் கொள்ளை உட்பட பல்வேறுவிதமான சமூக விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, அந்த நகரத்தினுடைய மிகப் பிரபலமான ரவுடி கரிக்கோல் ராஜு என்று அழைக்கக் கூடிய அந்த கரிக்கோல் ராஜுவினுடைய தலைமையில் மேலும் 9 பேர் கூட்டாகச் சேர்ந்து அன்றிரவு முத்துராமன்பட்டி என்று சொல்லப்படுகின்ற இடத்தில், அந்த வழியிலே சைக்கிளில் சென்று கொண்டிருந்த சந்துருவை அரிவாளால் வெட்டிக் கொலை செய்திருக்கிறார்கள். ஆகவே கொலை செய்த 10 பேர் மீது காலவல்துறையிலே புகார் கொடுக்கப்பட்டு, அதிலே 9 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தக் கொலைக்கு மூல காரணமாக அரிவாளால் முதலிலே வெட்டுவதற்குக் காரணமாக இருந்த, அதற்குத் தலைமை தாங்கி இருக்கக் கூடிய அந்த ரௌடியான கரிக்கோல் ராஜு என்பவர் இன்று வரையில் கைது செய்யப்படாத நிலை அந்த நகரத்திலே ஒரு பதட்டமான சூழ்நிலைமையைத் தொடர்ந்து தோற்றுவித்து வருகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு அவர் முன் ஜாமீன் பெற்று, அதன் பிறகு கோர்ட்டிலே சரண் அடைவதாக, அதற்கு கீழ் நிலையில் இருக்கக் கூடிய சில காவல்துறை அதிகாரிகள், அவர்கள் கள்ளச் சாராய வியாபாரம் செய்கின்றபோது அவர்களிடத்திலே கையூட்டு பெற்றவர்கள், மேலதிகாரிகள் இதிலே ஆர்வமாக இருந்தாலும் கூட, கீழே இருக்கக் கூடிய சில அதிகாரிகள் அதற்கு உறுதுணையாக இருப்பதாகக் கூட சொல்லப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட இந்த நிலையில் இந்தக் குற்றத்திற்கு முதல் காரணமாக இருக்கக் கூடிய அந்த கரிக்கோல் ராஜுவை உடனடியாகக் கைது செய்வதோடு, அவரை இந்த வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பல உதவிகளை அங்கே இருக்கக்கூடிய சிலகாவல்துறைஅதிகாரிகள் மேற்கொள்வதாகக் கூட அறிகிறோம். ஆகவே உரிய நட-

வடிக்கை எடுக்க தாங்கள் தலையிடவேண்டுமென்று வலியுறுத்துவதோடு, குறிப்பாக இந்தக் கொலை நடப்பதற்குச் சில தினங்களாகவே அந்த நகரத்தினுடைய மற்றொரு வாலிபச் சங்கத்தினுடைய தலைவராக இருந்த காமராஜ் என்று சொல்லக் கூடியவரை கொலை செய்வோம் என்று பகிரங்கமாக வீதிகளிலே பேசப்பட்டு வந்தும் கூட, புகார் கொடுக்கப்பட்டும் கூட, உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் விட்டதோடு, 15 ஆம் தேதி கொலை நடப்பதற்கு முந்தைய நாள் 14 ஆம் தேதி இன்னொரு வாலிபச் சங்கத்தினுடைய உறுப்பினரான மாதவன் என்று சொல்லக் கூடிய அந்த உறுப்பினருடைய வீட்டிற்கே அந்த கரிக்கோல் ராஜுவினுடைய கும்பல் நேரடியாகச் சென்று அவருடைய பெற்றோர்கள் முன்னிலையிலேயே அந்தமாதவனைக் குத்தியிருக்கிறார்கள். மருத்துவமனையிலே அதற்கான வாக்குமூலம் கூட கொடுத்திருக்கிறார் அந்த மாதவன்.

10-15 மணி

அந்த வாக்குமூலத்தை பதிவு செய்யச் சென்ற காவல்துறை அதிகாரி செல்லம் என்று சொல்லப்படக் கூடியவர் வாக்குமூலம் கொடுத்திருக்கிற மாதவனிடத்தில் ''கரிக்கோல் ராஜ் எவ்வளவு பெரிய மனிதர், நீங்கள் அவரைப் போய் இந்த வழக்கிலே சேர்க்கலாமா என்று சொல்லி ஒரு கள்ளச் சாராய பேர்வழிக்காக ஒரு சமூக விரோதிக்காக பரிந்து பேசி, அவர் மீது புகார் கொடுக்கக் கூடாது என்று ஒரு காவல் துறை அதிகாரியே சொல்லுகிறார். கடந்த காலத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், கள்ளச்சாராயப் பேர்வழிகளோடு சிலர் கைகோர்த்துக் கொள்கிற ஒரு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகத்தான் இது இருக்கிறது. அந்த அதிகாரியே இதை நேரிடையாகச் சொல்லி எப்.ஐ.ஆர்.-லே கரிக்கோல் ராஜுவினுடைய பெயர் சேர்க்காமல் விடுபட்டு இருக்கிறது. அதில் மேலும் 3 பேர்களை சேர்த்து வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். பதிவு செய்தவர்கள் ஒரு நாள் முழுவதும், மறுநாள் முழுவதும் அங்கேயே இருந்தவர்கள். ஆனால் மறுநாள் இரவு சந்துருவை ஏற்கனவே வழக்கில் இருக்கிற 3 பேரோடு மேலும் 7 பேரைச் சேர்த்து 10 பேர்கள்—அந்த 3 பேர் உட்பட—சைக்கிளிலே சென்றவர்களை ஓட ஓட விரட்டி கொலை செய்திருக்கக் கூடிய கொடுமையான நிகழ்ச்சி அங்கே நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே மாண்புமிகு முதலமைச்சருடைய (மணி அடிக்கப்பெற்றது) கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தக் கரிக்கோல் ராஜ் வழக்கிலிருந்து தப்பாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, கொலை செய்யப்பட்ட சந்துரு ஒரு பி.ஏ. பட்டதாரி, 28 வயது இளம் வாலிபர், அவருக்கு நோய்வாய்ப்பட்ட தந்தை, வயதான தாய் திருமணம் ஆகாத 2 தங்கைகளோடு சாதாரண ஏழைக் குடும்பத்தில் வசித்து வந்தார். அவர் அரசுடைய வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து,

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே, வேலைக்கான உத்திரவு கிடைத்து, ஜூலை 18 ஆம் தேதிக்கு வேலைக்கு வர வேண்டும் என்று உத்திரவு வந்திருக்கிறது. அந்த நிலையில் 2, 3 தினங்களுக்கு முன்னால் கொலை செய்யப்படுகிறார்.

ஆகவே அவருடைய வருமானத்தை நம்பியிருந்த அவருடைய குடும்பம் இன்று பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிறது. பல்வேறு ஏழைக் குடும்பங்களுக்கு உதவி செய்திருக்கக் கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது, அநியாயமான முறையிலே படுகொலை செய்யப்பட்டிருக்கிற சந்துருவின் ஏழைக் குடும்பத்திற்கு வாழ்வு அளிக்கக் கூடிய முறையில் முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு குறிப்பட்ட தொகையை நிவாரணமாக கொடுத்து அந்த ஏழைக் குடும்பத்தை பாதுகாப்பதற்கு தாங்கள் ஒரு நல்ல அறிவிப்பை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு, தெரிவிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து நான் அமர்கிறேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நகரசபை உறுப்பினரான காங்கிரஸ் கட்சியின் சார்பிலே விருதுநகரிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற திரு. கரிக்கோல் ராஜ் அவர்களைப் பற்றி ஒரு அபாண்டமான செய்தியை அவர் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு நேரமும் காவல் துறை மானியத்தில் பேசுவது போலவே அவர் பல்வேறு செய்திகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ''Mention'' சொல்லும் போது அதிலே வாதங்கள் வருவது சரியாக இருக்குமா? (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் ஒரு ''Mention'' சொல்லிவிட்டார். முதலமைச்சர் விடை சொல்லி விட்டால் அது முடிந்து விடும், இதில் வாதம் எதற்கு? (குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன்: ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி விடுகிறேன். எங்கள் கட்சியைச் சார்ந்தவர் அவர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நீங்கள் பேச வேண்டும் என்றால் பதிலுக்கு திரு. கோவிந்தசாமி பேச வேண்டும் என்பார். அது வாதமாக நீண்டு விடும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். இதிலே விளக்கங்கள் கொடுப்பது முறையல்ல. (குறுக்கீடு) இப்போது வழங்கப்படுவது தீர்ப்போ அல்லது நிவாரணமோ அல்ல. அவர் ஒரு செய்தியைச் சொல்லி விட்டார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்று சொல்ல இருக்கிறார். ஆகவே தொடர்ந்து இதிலே வாதம் வேண்டாம். (குறுக்கீடு). இப்படி நீங்கள் எழுப்புவது சரியல்ல. உறுப்பினர்கள் எல்லோரும்

1990 ஆகஸ்ட் 23] [பேரவைத் தலைவர்]

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ''zero hour''-இல் இப்படி நீங்கள் வாதங்கள் செய்ய ஆரம்பித்தால் சுத்தமாக அதற்கு நான் எந்த அனுமதியும் தரமாட்டேன். ஏற்கனவே ஒரு தடவை அவையிலே சொல்லியிருக்கிறேன். அதற்குச் சற்று இளக்காரம் கொடுத்தேன். (குறுக்கீடு).

இல்லை, அவர் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை. அவர் கட்சிப் பெயரைச் சொல்லவில்லை, ஆள் பெயரைத்தான் சொல்லி இருக்கிறார். அதற்காக நீங்கள் எழுந்து பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேச வேண்டும் என்றால் அவர் பதில் சொல்ல வேண்டும் என்பார். இது பட்டி மன்றம் அல்ல. ''zero hour''ஐ விவகாரமாக ஆக்கக்கூடாது. எல்லோரும் உட்காருங்கள்...

10-20 மணி

திரு. கே. ரமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங் கள்.

திரு. குமரி அனந்தன் : சொன்ன அந்த நபர் யார் ? இல்லை, இல்லை......

திரு. உ. ரா. வரதராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர்......

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவர்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராசன் ஒரு ''Point of order'' சொல்லுகிறார். என்னவென்று கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரம் இல்லாத நேரத்திலே.......

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்தச் சபை யினுடைய மரபுகளை மீறி, விதிகளையும் மீறி பல விஷயங்கள் நடப்பதை நான் அவ்வப்போது உங்களுக்கு எடுத்துக்காட்டி வருகிறேன். இந்த நடவடிக்கை அவர், கோவிந்தசாமி ஒரு உறுப்பினர், பொறுப்பானவர், அந்த விஷயம் முழுவதையும் நேராகத் தெரிந்திருப்பவர். அவர் சொல்லக் கூடிய காரி யத்தை அந்த சம்பந்தப்பட்ட நபரையே மறுத்து நல்லவர் என்று வாதம் பண்ணுகிறார் அவர். அவர் சொன்னதில் இருக்கின்ற சட்டப் பூர்வமான தவறு என்ன, விதிமுறையில் இருக்கின்ற தவறு

என்ன என்று அவர் சுட்டிக்காட்டவில்லை. எனக்கு அவரைப் பற்றி வேறு பிரச்சினை இல்லை. அந்த நிலைமையில் அதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் பதில் சொன்ன பிறகு அவர் கிளப்பட்டும், அவருக்கு நியாயம் இருந்தால். மற்றபடி இதை அனுமதிக்கக் கூடாது ஸ்பீக்கர் சார், அனுமதிப்பது தவறு, விதிகளுக்கும், மரபுகளுக்கும் எதிரானது என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு உங்களுடைய பதில் என்னவென்று சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்னுடைய பதில் அவர் சொன்ன நபர் கொலை நடந்த நேரத்தில் அந்த விருதுநகரில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அது உங்கள் வேலை இல்லையே. திரு. குமரி அனந்தன் அட்வோகேட் ஆக முடியாது. (குறுக்கீடு) நோ, நோ அதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் வழக்கை ஏற்று நடத்துகிறீர்களா என்ன? இங்கே உங்களுடைய வேலை அல்ல அது. (குறுக்கீடு) நோ, நோ அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. எல்லோரும் உட்காருங்கள். இல்லை, இல்லை, அவர் உங்களுடைய கட்சியைச் சுட்டிச் சொல்லவில்லை. (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் இந்தப்படுகொலை நிகழ்ச்சி குறித்து விவரங்களைச் சொன்னபோது இதிலே ஈடுபட்டவர் எந்தக் கட்சிக்காரர் என்று குறிப்பிடவில்லை. நபர்களின் பெயர்கள் தான் குறிப்பிடப்பட்டதே அல்லாமல் கொலை செய்தவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்றெல்லாம் சொல்லவில்லை. அப்படி ஒரு கட்சியைப் பற்றிச் சொல்லியிருந்தால் அந்தக் கட்சியின் சார்பிலே இங்கே இருப்பவர்கள் அதை மறுத்துப் பேச ஓரளவு உரிமை உண்டு என்று நான் கருதுகின்றேன். இருந்தாலும் அது இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களால் மறுக்கப்பட்டு இருக்கிறது. எனக்கு வந்துள்ள தகவல்களை இங்கே வைத்திட விரும்புகின்றேன். 15—7—1990 அன்று இரவு 10-45 மணியளவில் இந்திய ஜனநாயக வாலிபச் சங்கத்தின் பாண்டியநகர் கிளைச் செயலாளர் சந்துரு என்ற ஜெயச்சந்திரன் என்பவர் விருதுநகரில் பெரியகரிக்கோல்ராஜ் அவரது சகோதரர் சின்னகரிக்கோல்ராஜ் மற்றும் 8 நபர்களால் அரிவாள், வேல்கம்பு, கத்தி போன்றவற்றால் குத்தி கொலை செய்யப்பட்டார் என புகார் தரப்பட்டுள்ளது — நான் செய்யப்பட்டார் என்று சொல்லவில்லை, என்று புகார் தரப்பட்டுள்ளது—கொலையாளிகளும் கொலை செய்யப்பட்டவரும்

1990 ஆகஸ்ட் 23] *[டாக்டர் மு. கருணாநிதி]*

ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான். பெரியகரிக்கோல் ராஜ், விருதுநகர் நகராட்சியிலே உள்ள வார்டு எண் 28-க்கு கௌன்சிலராக இருக்கிறார். இவரும் சின்னகரிக்கோல்ராஜும் ஏற்கெனவே பல கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டு, அந்த வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதாகச் சொல்லப் படுகிறது. ராமசாமி மகன் மாதவனும், இந்திய ஜனநாயக வாலிப சங்கத்தினர் சிலருமாக விருதுநகரில் நடக்க இருந்த தங்களது சங்கத்தின் ஆறாவது தாலுக்கா மாநாட்டிற்கு 14—7—1990 அன்று அல்லம்பட்டி வட்டாரத்தில் பணம் வசூலிக்கச் சென்றனர். நாகராஜ், ஜெயராஜ், காடைஎன்பவர்கள் விருதுநகர் புதுத்தெருவில் தன் வீட்டின் முன்னால் உட் கார்ந்திருந்த மாதவனை எங்கள் அல்லம்பட்டி வட்டாரத்திலே வந்து ஏன் காசு வசூலித்தாய் என்று கேட்டு கத்தி முதலிய ஆயுதங்களால் தாக்கினார்கள். மாதவனின் மனுவின் பெயரில் விருதுநகர் பஜார் காவல் நிலைய குற்ற எண். 103/90-ல் 341, 324 இ.பி. கோ. பிரிவுகள் கீழ் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

10-25 மணி

இதைத் தொடர்ந்து 15—7—1990 அன்று இந்திய ஜன நாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சி யினரைக் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டினார்கள். அன்றைய தினமே சந்துரு என்ற ஜெயச்சந்திரன், காமராஜ் (பெரியப் பேட்டை கிளையின் செயலாளர் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்திற்கு) முருகன், அவர் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் நிரவித் தெரு கிளைச் செயலாளர்; குள்ளூர் சந்தை ரோட்டில் மேல்நிலைத் தண்ணீர் தொட்டிக்குப் பக்கத்திலுள்ள பட்டையாவின் பெட்டி கடைக்கு அருகில் நின்றபோது பெரிய கரிக்கோல்ராஜும் மற்றவர்களும் அரிவாள், கத்தி, வேல்கம்பு, சோடா பாட்டில் முதலியவற்றோடு அவர்களை சூழ்ந்து கொண்டு இந்த ஏரியாவிலே எங்களை எதிர்த்து கட்சி வளர்ப்பதா, வால் போஸ்டர் ஒட்டுவதா? என்று கோபத்துடன் வினவியதாகவும் ஜெயச்சந்திரன் அதற்கு அதையெல்லாம் நீங்கள் அரசியலிலே பார்த்துக்கொள்ளுங்கள் என்று பதில் கூறியதாகவும் உடனே பெரிய கரிக்கோல் ராஜ், ஜெயச்சந்திரன் முதுகில் குத்தியதாக வும், ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது, காயத்துடன் ஓடியவரை துரத்தி நாகராஜனும், பாண்டியும் மீண்டும் வேல்கம்பால் குத்தியதாகவும் புகாரில் கூறப்பட்டிருக் கிறது. சின்ன கரிக்கோல் ராஜ் அரிவாளால் கழுத்தில் வெட்டிய தாகவும் ஜெயச்சந்திரன் கீழே விழுந்தார் என்றும் புகாரில் கூறப் பட்டிருக்கிறது. அவரோடு இருந்த காமராஜும், முருகனும் தப்பி ஓடி இந்திய ஜனநாயக வாலிபர் சங்க நகரச் செயலாளர் ராஜேந்திரனிடமும், வட்டச் செயலாளர் பழனிச்சாமியிடமும் முறையிட்டார்கள். அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து சேருவதற்கு முன் ஜெயச்சந்திரன் என்ற சந்துருவின் உயிர் பிரிந்து விட்டது. காமராஜின் புகார் மீது 16—7—1990 அன்று

விருதுநகர் கிழக்கு காவல் நிலையக் குற்ற எண். 192/90, 147, 148, 302 இ.பி.கோ. பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பிரேத பரி சோதனைக்குப் பிறகு மாவட்டத்தினுடைய செயலாளர் எஸ்.ஏ. பெருமாள் அவருடைய தலைமையில்--மார்க்சிஸ்ட் கட்சியின் செயலாளர்—ஊர்வலம் எடுத்த பின் உடல் அடக்கம் செய்யப் பட்டது.

குற்றவாளிகள் என்று கூறப்பட்ட சின்ன கரிக்கோல் ராஜ், நாகராஜன், ஜெயராஜ், காளியப்பன் ஆகியோர் திருவில்லிப் புத்தூர், மதுரை நீதிமன்றங்களில் சரண் அடைந்தார்கள். காமராஜ் மற்றும் 3 பேர் கைது செய்யப்பட்டு ரிமாண்டுக்கு அனுப்பப்பட்டார்கள். பெரிய கரிக்கோல் ராஜ் தலைமறைவாகி யுள்ளார் என்று கூறப்படுகிறது. அவர் கைது செய்யப்படவில்லை. ஜெயச்சந்திரனின் ரத்தம் தோய்ந்த உடைகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு ரசாயன அறிக்கை வரவேண்டும் என்பதற்காக, இன்றைக்கு எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கு விசாரணையில் உள்ளது. இது தான் கொடுக்கப்பட்ட புகார். அதன் அடிப்படை யில் நான் தகவல்களைச் சொல்லியிருக்கிறேன். உண்மை என்ன? குற்றவாளிகள் யார் ? என்பதை நீதிமன்றம் விசாரித்து அதற்குப் பிறகு தான் முடிவை எடுக்கும்.

இருந்தாலும் இன்றைக்கு ஒரு ஜனநாயக வாலிபர் சங்கத்தில் துடிப்புள்ள வாலிபராக பாடுபட்டுக்கொண்டிருந்தவர் சந்துரு என்பதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் அவருக்கு இப்போது தான் போக்கு வரத்துக் கழகத்திலே அந்த பி. ஏ. பட்டதாரிக்கு ஒரு வேலை கிடைத்ததாகவும், அந்த வேலையைப் பெற்று தன்னுடைய ஏழைக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு முற்படும் முன்பே அவர் இப்படிப்பட்ட ஒரு கொலை செய்யப்பட்டு மரணம் அடைந்து விட்டதாகவும் சொல்லி அவருடைய குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். மனித நேய அடிப்படையில் அது எந்தக் குடும்பமாக இருந்தாலும், எந்தக் கட்சியினுடைய குடும்பமாக இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு வாலிபர், ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பிலுள்ள ஒரு வாலிபர் திடீரென்று அகால மரணம் அடைகின்ற அளவுக்கு கொலை செய்யப்பட்ட காரணத்தால் அந்தக் குடும்பத்திற்கு பாதுகாப்பு நிதியாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். (கைத்தட்டல்.)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே ......10 ஆயிரம் ரூபாய்......(குறுக்கீடுகள்).

திரு. உ. ரா. வரதராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக் கீடுகள்).

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வேறு செய்தி பேசுகிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசுவதற்கு முன்பாக நீங்கள் Point of Order எழுப்புவது சரியாக இருக்காது. (குறுக்கீடுகள்). உட்காருங்கள், (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கொலை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஒரு குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த 10 ஆயிரம் ரூபாயை — அதை வரவேற்று — அதற்கு மேல் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பதிலே நாங்களும் துணை இருக்க தயார். ஆனால் குற்றம் செய்யாத ஒருவர் மீது பழி வந்து விடக்கூடாது என்கின்ற நோக்கத்தோடு தான் இங்கே எடுத்து சொல்லப்பட்டது என்பது தவிர வேறு ஒன்றும் இல்லை. அவருக்குத் தெரிந்த செய்தியைப் போலவே எனக்குத் தெரிந்த செய்தியும் விருதுநகரிலே காமராஜ் விழாவிலே கலந்து கொண்ட தோழர்களிலே அவர் ஒருவர் என்று எனக்கு வந்த செய்தி சொல்கின்ற காரணத்தால் அந்தச் சம்பவம் நடந்த நேரத்திற்கும் அதற்கும் இருக்கின்ற வேறுபாட்டைக் காட்டினேன்.

10-30 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன். (குறுக்கீடு) உட்காருங்கள். No further discussion. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. கோ. வீரையன் : Point of Order. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன Point of Order சொல்லுங்கள். இனிமேல் 'Zero Hour' கிடையாது. இது தான் கடைசி முடிவு. Point of Order-ஐ கேளுங்கள்.

திரு. கோ. வீரையன் : அது எப்படி? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனி அப்படிச் செய்தால் தான் சரியாக வரும். (குறுக்கீடு) இப்பொழுதே அல்ல. இப்போது இருந்தே.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் உட்காருங்கள். நேராக விதி 110-க்கே போகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ......(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீரையன், 'Point of Order' தானே ?

திரு. கோ. வீரையன் : Point of Order தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லுங்கள்.

திரு. கோ. வீரையன் : இப்போது அவர்கள் கிளப்பி இருப்பது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி செய்தது சரி என்று சொன்னார்கள். அதேபோல உண்மையான குற்ற வாளிகளைக் கண்டுப்பிடிப்பதற்கும் உதவுவோம் என்று சொன்னார்கள். உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்கு அவர்கள் துணை போகக் கூடாது. உண்மையான குற்றவாளி களைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்தி (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன Point of Order (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். இது என்ன Point of Order தேவையா இது? Point of Order என்றால், ஏதாவது நடை முறையிலே பிரச்சினைகள் இருந்தால் பேசவேண்டும். சும்மா, Point of Order என்ற பேரிலே எழுந்து பேசி விடுவ தென்றால் முறையல்ல. (குறுக்கீடு) இதிலே ஒவ்வொருவரும் வழி மொழிவது, முன்மொழிவது (குறுக்கீடு) திரு. சி. கோவிந்தராஜன் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன் இல்லையா ? உட்காருங்கள். திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டு இருக்கக் கூடாது.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினைகளை, எந்தப் பிரச்சினை யாக இருந்தாலும் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டு மானாலும் பேச முடியும். பேச முடியும் என்பதற்காக பேசுவது சட்டமன்றத்திற்குச் சரியல்ல. ஏதோ, ஒன்றிரண்டு கருத்துக்கள், அவரவர் கருத்தைக் கூறினால், அரசாங்கத்திற்குப் பதிலளிக்க ஒரு கடமை இருக்கிறது ; அரசாங்கம் தன்னுடைய கடமையை எப்பொழுதும் செய்யும். தன்னால் முடிந்த அளவுக்கு நியாயத்தை வெற்றி பெறச் செய்ய அரசு என்றைக்கும் முயற்சிக்கும். ஆகவே,

1990 ஆகஸ்ட் 23] [டாக்டர் க. அன்பழகன்]

அவரவர்கள் சொல்கிற கருத்துக்களுக்கெல்லாம் வாய்ப்பாக Point of Order எழுப்புவது அவசியமல்ல. எனவே, அடுத்த பிரச்சினையைத் தொடர்ந்து மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன் . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : Point of Order என்று இந்தப் பிரச்சினை வரத் தேவையில்லை என்பது பொதுவான கருத்து. அவரவர் உணர்வுகளை, அவரவர்கள் வெளியிடுவதிலே பெரிய மாறுபாடு கிடையாது. சட்டத்தையும், ஒழுங்கையும், நீதியையும் பாதுகாக்க இந்த அரசு தன்னுடைய கடமையை முறையாகச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்தராஜன். . . (குறுக்கீடுகள்) இது தொடர்பாக வேண்டாம். வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால் பேசுங்கள் (குறுக்கீடுகள்) இது தொடர்பாக வேண்டாம்; உட்காருங்கள் (குறுக்கீடு) வேறு வாதமெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஆயிரம் செய்தி பேசுகிறீர்கள். அப்புறம் அதிலே ஒவ்வொரு வாக்கியத்திலும் பொருள் பார்த்துக்கொண்டே இருப்பதா ? (குறுக்கீடு) நீங்கள் இப்படிப் பேசினீர்கள் என்றால், கண்டிப்பாக நான் சொல்கிறேன், எல்லா உறுப்பினர்களும் கவனியுங்கள், இப்படி ஒவ்வொன்றையும் கிளறிக் கிளறிப் பிரச்சினையை எழுப்புவோம் என்று ஆரம்பித்தீர்களானால் பேசுவதற்கே அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) அதனால் பரவாயில்லை. உட்காருங்கள் எல்லோரும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் வீரையன் அவர்கள் சொன்னது, யாரும் துணை போகக் கூடாது என்றுதான் சொன்னார். அது காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய காதிலே சரியாக விழாத காரணத்தாலோ என்னவோ, அவர் துணை போகிறார் என்று எடுத்துக் கொண்டு 'Point of Order' கேட்பதாக நான் அறிய வருகிறேன். யாரும் துணைபோகக் கூடாது, உண்மையான குற்றவாளிகளுக்கு யாரும் துணை போகக் கூடாது என்ற ஒரு பொதுக் கருத்தைத்தான் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன் கீழ் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடு) இருக்கட்டும். Chance வரும் போது பார்த்துக் கொள்ளலாம்.